அசல் வழக்கு எண்: 50 /2021
நாள்: 26 .03.2025
DW1
பெயர் : காமேஷ்வரி
க/பெ : பாலசுப்பிரமணியன்
வயது : 70
ஊர் : தாளக்குடி, திருச்சி

2025 ம் ஆண்டு மார்ச் திங்கள் 26 ம் நாள் Indian Oaths Act–1969 பிரிவு –6(2)ன் ஏற்பாட்டின்படி வாதி தரப்பு சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

(சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.A. history படித்துள்ளேன். நான் தாக்கல் செய்த நிரூபண பிரமாணபத்திரிக்கையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த நிரூபண பிரமாண பத்திரிக்கையில் பாரா 2 ல் " **என்னிடமும்,எனது சகோதரியான மேற்படி ஜெயலெட்சுமியிடம் அவரது பாக சொத்துக்களை விற்பனை செய்ய விற்பனை நபராக வாதியிடம் எழுதி கொடுத்த ஆவணத்தை**"என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், பிரமாண பத்திரிக்கையில் மேற்படி கூறியதை பொருத்தமட்டில் வாசா.ஆ. 1 உயில் ஆவணத்தில் உள்ள கையெழுத்து மட்டும் ஒப்புக் கொள்ளப்படுகிறது, சங்கதிகள் நாங்கள் கூறப்பட்டுள்ளவாறு இல்லை.

2. எனது பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ளவாறு மேற்படி வா.சா.ஆ.1 ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணம் என்பதால் அது திருத்தப்பட்டிருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு இல்லாமல் வேறு புகார் ஏதேனும் வாதி நாகராஜ் மீது கொடுக்கப்பட்டதா என்றால் சென்னையில் புகார் கொடுத்தோம். ஆனால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை, அதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் ஏதேனும் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. உண்மையில் அவ்வாறு நடந்ததிருநதால் நான் உரிய நடவடிக்கை எடுத்து அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

3. நான் எங்கு வசித்து வருகிறேன் என்றால் திருச்சியில் வசித்து வருகிறேன் , உடல்நிலை காரணமாக அவ்வப்போது சென்னை சென்று வருவேன். மேற்சொன்ன புகார் இந்த வழக்கிற்கு முன்பு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான், அச்சமயம் நான் சென்னையில் வசிக்கவில்லை என்றால் அவ்வப்போது சென்று வருவேன். நான் சென்னைக்கு எப்போதிலிருந்து சென்று வருகிறேன் என்றால் எனது மகளை திருமணம் செய்து கொடுத்ததில் இருந்து சென்று வருகிறேன். எனக்கு இரண்டு இருப்பிட சான்று உள்ளதா என்றால் இல்லை, சென்னை முகவரியில் வங்கி பாஸ்புக் ஒன்று உள்ளது. சென்னை தான் எனது நிரந்தர முகவரி என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

4. காஞ்சிபுரத்தில் எனது சகோதரிக்கு பாத்தியப்பட்ட இடத்தை பொறுத்து அவர் எனக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான், அதை வாலஜாபேட்டையில் பதிவு செய்தேன் என்றால் சரிதான். அதில் எனது சகோதரி தமிழில் கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள எனது சகோதரியின் கையொப்பம் ஆங்கிலத்தில் உள்ளது என்றால் சரிதான் . எனது சகோதரி கடைசி காலத்தில் உடல்நிலை சரியில்லாமல் புதுக்கோட்டை , திருச்சி மருத்துவமனைகளில் சிகிச்சையில் இருந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மருத்துவமனையில் உள்ள மருத்துவ பதிவேட்டை பார்த்தால் நான் எத்தனை முறை வந்தேன் என்ற விவரமும், வாதி எத்தனை முறை வந்தார் என்ற விவரமும் தெரிய வரும் என்றால் சரிதான்.

5. எனது பிரமாண பத்திரிக்கையில் எனது குழந்தைகளை அவரது குழந்தைகளை போல் பாவித்து வளர்த்து வந்தார் என்று சொல்லியுள்ளேன் மேற்படி மருத்துவ பதிவேட்டை பார்த்தால் அந்த விவரம் தெரிய வரும் என்றால் சரிதான். அவர்கள் நீண்ட நாட்களாக பேச்சு வார்த்தையில் இல்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது பிரமாண பத்திரிக்கை 3 ம் தாளில் 17 வது வரியில் இருந்து " ஈமை காரியங்களை எனது கணவர் தான் செய்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது" என்றால் சரிதான்.அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

6. எனது சகோதரி ஈமை காரியங்கள் அனைத்தும் வாதி தான் செய்தார் என்றாலும்,அதற்கான அனைத்து ஆவணங்களையும் வாதி வைத்துள்ளார் என்றாலும் சரியல்ல, எனது கணவர் தான் செய்தார். எனது சகோதரியின் மருத்துவ செலவுகளையும் வாதி தான் பார்த்து வந்தார் என்றாலும், அதற்கான ஆவணங்களும் அவர் வசம் வைத்துள்ளார் என்றாலும் சரியல்ல. எனது பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ளவாறு

குடும்ப சூழ்நிலை காரணமாக விற்பனை செய்துள்ளேன் என கூறப்பட்டுள்ள நிலையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்பு விற்பனை செய்யப்பட்டதா என்றால் இல்லை. இந்த வழக்கின் அசல் வழக்கு எண். 50/2021 என பிரமாண பத்திரிக்கையில் பதிவாகியுள்ளது என்றால் சரிதான்.

7. மேற்படி பிரமாண பத்திரிக்கையில் ஆவணபட்டியலில் 4 வது, 5 வது ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை தவிர வேறு எந்த கிரைய ஆவணங்களையும் குறியீடு செய்யவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்பு கிரையம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான் . இந்த வழக்கு தாக்கல் செய்ததற்கு சம காலத்தில் மேற்கண்ட ஆவணங்கள் பதிவாவதற்கு முன்பாகவே வாதியானவர் எனக்கும், கிரையதாரரான காளிதாஸ் என்பவருக்கு எதிராக தஞ்சாவூர் உரிமையியல் நீதிமன்றத்தில் அதில் கண்ட சொத்துக்கள் சம்மந்தமாக வழககு தாக்கல் செய்து அந்த வழக்கும் தள்ளுபடியான விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேறபடி வழக்கில் காளிதாஸ் வழக்கறிஞரை நியமித்து ஆஜரான விவரம் அவர் எனக்கு சொல்லி தெரியும் என்றால் சரிதான்.

8. எனது பிரமாண பத்திரிக்கையில் 3 வது பத்தியில் 11 வரியில் "எனது சகோதரி ஜெயலெட்சுமி பணி நிமித்தமாக இலுப்பூரில் இருந்த போது " என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் , அச்சமயம் டியூசன் எடுத்தார். அவ்வாறு விரிவாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த காலத்தில் அவர் எங்கு வசித்தார் என்றால் ராஜேஸ்வரி டவுன்சிப், இலுப்பூரில் மூன்று மாதம் வாடகைக்கு இருந்தார். ராஜேஸ்வரி டவுன்சிப் என்பது அவரது சொந்தமான வீடு என்றாலும், எனது பிரமாண பத்திரிக்கையில் உள்ள விவரங்களை சமாளிப்பதற்காக வாடகைக்கு இருந்தேன் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி தான் அவரது தத்து பிள்ளை என்ற ஹோதாவில் எனது சகோதரியை வைத்தியம் பார்த்து , அவரது ஈமை காரியங்களை செய்து வந்தார் என்றாலும் , நானும் , என்னால் 4 ,5 ம் ஆவணத்தில் உள்ள கிரையதாரர் காளிதாசும் கூட்டு சதி செய்து ஜெயலெட்சுமி அவர்களின் சொத்துக்கள் மீதான வாதியின் உரிமையையும் பாத்தியத்தையும் மறைத்து இந்த வழக்கை நடத்துகிறேன் என்றால் சரியல்ல.